# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **பாராளுமன்றம்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - I முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# பாராளுமன்றம்

**மாநிலங்களவை (ராஜ்ய சபை - சரத்து 80)**

- ❖ மாநிலங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பு. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள மக்களின் மறைமுக பிரதிநிதித்துவ அமைப்பாக திகழ்கிறது.
- ❖ மாநிலங்களவையில் 250க்கும் மிகாத



உறுப்பினர்கள் இருப்பர். இவர்களில் 12 பேர் நியமன உறுப்பினர்கள் (குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவர்), 238 பேர் மாநிலங்களில் இருந்தும், யூனியன் பிரதேசங்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- ❖ தற்பொழுது 245 உறுப்பினர்கள் உள்ளனர். (12 பேர் + 229 பேர் + 4 பேர்)

**தேர்தல்**

- ❖ மாநிலங்களவை உறுப்பினர்கள் மாநில சட்டப் பேரவைகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் ஒற்றை வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- ❖ ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்தந்த மாநிலங்களின் மக்கள் தொகையைப் பொறுத்து அமையும்.

**பதவிக்காலம்**

- ❖ உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள். நாடாளுமன்றம் இயற்றியுள்ள சட்டப்படி, மாநிலங்களவை உறுப்பினர்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் ஒவ்வோர் இரண்டாண்டு முடிவிலும் ஒய்வு பெறுகிறார்.
- ❖ மாநிலங்களவை நிரந்தரமான அமைப்பாகும், அதனை குடியரசுத் தலைவராலும்கூட கலைக்க முடியாது.

**தகுதிகள்:**

- ❖ இந்திய குடிமகனாக இருக்க வேண்டும். மாநிலங்களவை

உறுப்பினராக 30 வயது நிறைந்தவராகவும் இருக்க வேண்டும்.

- ❖ மத்திய அரசிலோ, மாநில அரசிலோ ஊதியம் பெறும் எந்த ஒரு பதவியிலும் இருக்கக் கூடாது.
- ❖ குற்றவழக்கில் 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டணை பெற்றிருக்கக் கூடாது.

**மக்களவை (லோக் சபா - சரத்து 81)**

- ❖ மக்களவை மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டது.
- ❖ 18 வயது நிரம்பிய இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் வாக்களிக்கும் உரிமை பெற்றவராவர்.
- ❖ அரசியலமைப்பின்படி, மாநிலங்களிலுள்ள தொகுதிகளில் இருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் 530க்கு மிகாமலும், யூனியன் பிரதேசங்களில் இருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும்
- ❖ உறுப்பினர்கள் 20க்கு மிகாமலும் மக்களவை இருக்க வேண்டும். ஆங்கிலோ - இந்திய சமூகத்தைச் சார்ந்த இரண்டு உறுப்பினர்களை குடியரசுத் தலைவர் நியமனம் செய்யலாம். மக்களவையில் அதிகபட்சமாக 552 உறுப்பினர்கள் இருக்கலாம்.
- ❖ ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மக்கள்தொகைக்கு ஏற்றவாறு மக்களவை உறுப்பினர்கள் எண்ணிக்கை மாறுபடும். (2001 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி).
- ❖ தற்போது மக்களவையில் 545. உறுப்பினர்கள் (530 + 13 + 2) உள்ளனர். பதவிக்காலம் 5 ஆண்டுகள்.

**நாடாளுமன்ற உறுப்பினராவதற்கான தகுதிகள் சரத்து (84):**

- ❖ இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்.
- ❖ மக்களவை உறுப்பினராக 25 வயது நிறைந்தவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ மத்திய அரசிலோ, மாநில அரசிலோ ஊதியம் பெறும் எந்த ஒரு பதவியிலும் இருக்கக் கூடாது.
- ❖ குற்றவழக்கில் 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டணை பெற்றிருக்கக் கூடாது.

**மக்களவையின் பதவிக்காலம்:**

- ❖ மக்களவை முதல் கூட்டநாளிலிருந்து 5 ஆண்டுகள் கொண்டிருக்கும். நெருக்கடி கால நிலையின் போது அவை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்க முடியும். ஆனால் நெருக்கடி காலநிலை
- ❖ முடிவுற்ற பிறகு ஆறு மாதத்திற்கு மேல் அந்த பதவி நீடிக்க கூடாது.

**மக்களவை உறுப்பினர்களின் தகுதி நீக்கம் (சரத்து 102):** இரண்டு வழிகளில் நீக்கம் செய்யப்படுகிறது.

1. 1951 ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி கீழ்க்கண்ட தகுதியின்மை 5 ஆண்டுகளுக்கு செயலில் இருக்கும்.

- ❖ தேர்தலின்போது தவறான நடவடிக்கையில் ஈடுபட்டு தண்டிக்கப்பட்டு இருத்தல்,
- ❖ இரண்டு ஆண்டிற்கு மேல் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படுதல்,
- ❖ தேர்தல் செலவு கணக்குகளை உரிய காலத்தில் காட்டாமல் இருத்தல்.
- ❖ ஊதிய பதவி கொண்டிருத்தல்

- ❖ கட்சித்தாவல் : 1985 ல் 52வது அரசியலமைப்பு சட்டதிருத்தம் வாயிலாக கொண்டுவரப்பட்டது. இது கட்சித்தாவல் காரணமாக பதவி தகுதி நீக்கம் செய்கிறது. கட்சித்தாவல் காரணமாக பதவி நீக்கம் செய்யும் தகுதி சபாநாயகருக்கே உண்டு.

**காபந்து அரசு (Care-taker Government) என்றால் என்ன?**

- ❖ ஒரு அரசின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும் புதிய அரசு பொறுப்பேற்கும் வரை அவ்வரசு பதவியில் இருக்கலாம்.
- ❖ எனவே ஒரு அரசின் பதவிக்காலம் முடிந்த பின்னரும் புதிய அரசு பொறுப்பேற்றுக் -கொள்ளும் வரை அவ்வரசு பதவியில் இருந்தால் அது காப்பந்து அரசு எனப்படும்.
- ❖ காப்பந்து அரசுக்கென சில ஒழுக்கக் கட்டுப்பாடுகள் உள்ளன. மேலும் இது பெரிய கொள்கை முடிவுகளை எடுக்கக்கூடாது.
- ❖ ஆனால் குடியரசுத் தலைவர் காபந்து அரசால் நிறைவேற்றப்படும் அத்தகைய மசோதாக்களை திருப்பி அனுப்பலாம்.

**சட்டம் இயற்றுவதற்கான நடைமுறை**

மசோதாக்கள் இருவகைப்படும்.

**1. சாதாரண மசோதா:**

- ❖ மாநிலங்கள் அவையிலோ அல்லது மக்களவையிலோ கொண்டு வரப்படலாம். இந்த மசோதாக்கள் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட பின்னர் குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

- நாடாளுமன்றத்தின் இரு அவை -களிலும் கருத்து ஒற்றுமை ஏற்படாவிடின் குடியரசுத்தலைவர் கூட்டுக்கூட்டத்தை (Joint Sitting) ஏற்படுத்துவார்.

**2. பண மசோதா(Money Bill):**

(சரத்து 110 ல் வரையறுக்கப்பட்டுள்ளது).

i. மக்களவையில் தான் முதலில் கொண்டுவரப்படும்.

ii. இதற்கு குடியரசுத்தலைவரின் அனுமதி தேவை.

iii. ஒரு மசோதா பண மசோதாவா அல்லது இல்லையா என்பதை தீர்மானம் செய்வது மக்களவையின் சபாநாயகர் ஆவார். இவரது முடிவே இறுதியானது.

iv. மக்களவையில் பண மசோதா இயற்றப்பட்ட பிறகு மாநிலங்கள் அவைக்கு அதன் பரிந்துரைகளுக்காக அனுப்பப்படும். இதனை மாநிலங்கள் அவை தன் பரிந்துரைகளுடன் 14 நாட்களுக்குள் மக்களவைக்கு திரும்ப அனுப்புதல் வேண்டும். மக்களவை இந்த பரிந்துரைகளை ஏற்கலாம் அல்லது ஏற்காமல் போகலாம்.

v. பின்னர் இந்த மசோதா குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

**ஆண்டு நிதிநிலை அறிக்கை (சரத்து 112):**

- ஒவ்வொரு நிதி ஆண்டு குறித்தும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அந்த நிதி ஆண்டிற்கான இந்திய அரசின் வரவு மற்றும் செலவு மதிப்பீட்டு அறிக்கையை கொண்டு வரவேண்டும். (ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை)

- 2018 முதல் ஜனவரி 1லிருந்து டிசம்பர் 31 வரை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

**கூறுகள்**

- வருவாய் மற்றும் செலவினங்கள்
- வருவாய் பெருக்கும் வழிவகைகள்
- சென்ற ஆண்டின் வரவு செலவு, உபரி பற்றாக்குறை
- வரும் ஆண்டிற்கான நிதிதிட்டங்கள்

**பட்ஜெட் அடிப்படை கொள்கைகள்:**

- ஆண்டின் அடிப்படை
- துறைரீதியிலான மதிப்பீடுகள்
- பணத்தின் அடிப்படையில்
- சமச்சீரான பட்ஜெட்
- காலாவதி சரத்து

**அமைப்புகள்**

- நிதி அமைச்சகம்
- நிர்வாக அமைச்சகம்
- திட்டக்குழு
- கணக்கு (ம) தணிக்கை

**பட்ஜெட் சமர்பித்தல்**

- குடியரசு தலைவர் வருடாந்திர நிதி அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்க வேண்டும்.

**பட்ஜெட் தயாரித்தல்**

- 6 நிலைகள்

**பட்ஜெட் அறிமுகம்**

**ரயில்வே பட்ஜெட் - 1921 (அக்வொர்க் கமிட்டி)**

- ரயில்வே அமைச்சர்
- பிப். 3வது வாரம்

**பொது கலந்தாய்வு**

- 3-4 நாட்கள் வரை
- இரு அவைகளிலும்

**நிர்வாக கமிட்டி சோதனை**

- பாராளுமன்றத்தின் துணைக் குழுக்கள் 3-4 வாரங்கள்
- ஒவ்வொரு அமைச்சகத்தின் **மானியக் கோரிக்கைகள்** மீது கலந்தாய்வு செய்யும்

**மானிய கோரிக்கை:**

- மக்களவை மட்டும் வாக்களிக்கும் உரிமை
- பொருளாதார / கொள்கை / அடையாள - வெட்டுத் தீர்மானம்

**கையாடல் மசோதா தாக்கல்:**

- இந்திய தொகுப்பு நிதி மீதான செலவுகள்
- பாராளுமன்ற சட்ட மூலம் மட்டும் எடுக்க முடியும்.

**நிதிமசோதா தாக்கல்**

- வரும் ஆண்டிற்கு இந்திய அரசிற்கு நிதி தேவையை பெறுவதற்காக தாக்கல்.

**பட்ஜெட் செயல்பாடு :**

- நிதி அமைச்சகத்தின் கட்டுபாட்டில் உள்ள அமைச்சகங்கள் துறைகளின் கீழ், நிதி நிர்வாக நடைபெறுக.

**தணிக்கை :**

- CAG ஆல் தணிக்கை செய்யப்படும்.

**மக்களவைத் தலைவர்(சபாநாயகர்)**

- **சரத்து (93):** மக்களவைத் தலைவர், துணைத் தலைவரை சபையின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

- **பதவிக்காலம்:** மக்களவை பதவிக்காலம் வரை செயல்படுவார்.
- **சரத்து (94)** சபையின் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் பதவிநீக்கம் செய்யலாம். தீர்மானம் நிறைவேற்றப் -படுவதற்கு 14 நாட்கள்முன்பாகவே தெரிவிக்கப்பட வேண்டும்.
- அவைத் தலைவர், அவை கூட்டங்களுக்கு தலைமைதாங்குவார்.
- அவைத் தலைவர், கூட்டம் நடைபெறும்பொழுது பத்தில் ஒரு பங்கு உறுப்பினர் இல்லாத போது கூட்டத்தை ஒத்தி வைப்பார்.
- ஒரு மசோதா சாதாரண மசோதாவா, நிதி மசோதாவா என்பதை முடிவு செய்யும் அதிகாரம் மக்களவை தலைவரிடமே உள்ளது.
- மசோதாக்கள், தீர்மானங்கள் மீது சபை வாக்களிக்கும் போது சமநிலை ஏற்பட்டால் வாக்களிக்கும் உரிமை உடையவர். பாராளுமன்றத்தின் இரு அவைகளும் ஒன்றாகக் கூடும்போது அக்கூட்டுக் கூட்டத்திற்கு தலைமை தாங்குபவர்.
- அவை உறுப்பினர்களின் கட்சித் தாவல் நடவடிக்கையினால் ஏற்படும் தகுதியிழப்பினை முடிவு செய்பவர்.
- பாராளுமன்றக் குழுக்களின் தலைவர்களை முடிவு செய்கிறார்.
- மக்களவைத் தலைவர் இல்லாதபோது அவையை நடத்துவது மக்களவைத் துணைத்தலைவர் ஆவார். மக்களவை தலைவர் தேர்விற்குப் பிறகு அவர் குறித்த தேதியில் துணைத்தலைவர் சரத்து (93) அவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

| மக்களவைத் தலைவர் | மாநிலங்களவைத் தலைவர் |
|---|---|
| 1. மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் | நாடாளுமன்ற உறுப்பினர்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் |
| 2. மக்களவையின் உறுப்பினர் | எந்த அவையிலும் உறுப்பினர் இல்லை |
| 3. "பணமசோதா சரத்து (110)" எது என்பதை வரையறை செய்கிறார். இவரின் முடிவே இறுதியானது. | அத்தகைய அதிகாரம் இவரிடம் இல்லை |
| 4. இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தை தலைமையேற்று நடத்துகிறார். | கூட்டுக்கூட்டத்திற்கு தலைமை ஏற்பதில்லை |
| 5. தனக்கெதிரான பதவி நீக்கத் தீர்மானத்தின்போது முதல் கட்டத்தில் வாக்களிக்கலாம் | எந்த நிலையிலும் வாக்களிக்க இயலாது. |

- மக்களவையின் பதவிக்காலம் வரை இவர் பதவியில் இருப்பார்.
- இவரை பதவிநீக்கம் செய்ய 14 நாள் முன்னறிவிப்புக்குப்பின் மக்களவையின் பெரும்பான்மை உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மூலம் நிறைவேற்றலாம்.

(**குறிப்பு:** சுதந்திர இந்தியாவின் முதல் மக்களவை சபாநாயகர் - ஜி.வி. மாவ்லங்கர் 1952 - 1956, தற்போதைய சபாநாயகர் - சுமித்ரா மகாஜன் இவர் இந்தியாவின் இரண்டாவது பெண் சபாநாயகர் ஆவார். தற்போது மக்களவையின் துணை சபாநாயகர் - திரு. தம்பிதுரை ஆவார்)

**மாநிலங்களவைத் தலைவர்** சரத்து (89)

- இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவர் பதவி வழியே மாநிலங்களவைத் தலைவராகிறார்.
- இரு அவை உறுப்பினர்களால் இவர் தேர்வு செய்யப்படுகிறார்.
- இவர் குடியரசுத் தலைவராக செயல்படும்போது மாநிலங்களவை தலைவராக செயல்படமாட்டார்.
- இவர் குடியரசுத் துணைத்தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டால் மட்டுமே மாநிலங்களவை தலைவர் பதவியை இழப்பார்
- வாக்கெடுப்பின்போது முதல் கூட்டத்தில் வாக்களிக்க மாட்டார். சமநிலை நிழவும்போது வாக்களிக்க முடியும்.

**மாநிலங்களவைத் துணைத்தலைவர்:**

- இவர் மாநிலங்களவை உறுப்பினர் -களால் தமக்குள்ளே தேர்வு செய்யப்படுகிறார்
- மாநிலங்களவை தலைவர் இல்லாதபோது அவருடைய பணியைச் செய்கிறார்.
- இவரை பதவிநீக்கம் செய்ய 14 நாட்கள் முன்னறிவிப்புடன் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றப்படும்.
- இவருடைய ஊதியம் மற்றும் படிகள் இந்திய திரட்டு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.
- தற்போது மாநிலங்கள் அவையின் துணைத்தலைவர் - திரு. குரியன் ஆவார்.

**பாராளுமன்ற குழுக்கள்**

- பாராளுமன்ற குழுக்கள் மூன்று வகைக்குள் அடங்கும். அவையாவன,

1. பொதுவான குழுக்கள்
2. சட்டமியற்றுதல் சார்ந்த குழுக்கள்
3. நிதிக்குழுக்கள்

### பொதுவான குழுக்கள்:

**1. விதிகள் பற்றிய குழு:**

- ❖ சபை நடவடிக்கைகளில் பின்பற்றப்படும் நடைமுறைகளையும் பணி நடைபெறுதலையும் ஆய்வு செய்து தேவைப்படும் மாற்றங்களை பரிந்துரை செய்யும்

**2. அலுவல் ஆலோசனைக் குழு:**

- ❖ மசோதாக்கள், மற்ற பணிகள் பரிசீலனை செய்யப்படும்போது, ஒவ்வொரு நிலையிலும் அதற்கென சபையில் ஒதுக்கப்பட வேண்டிய நேரம் குறித்து இக்குழு பரிந்துரை செய்யும்.

**3. உரிமைக் குழு:**

- ❖ சபையின் உரிமை மீறல்களையும், உறுப்பினர்களின் உரிமை மீறல்களையும் பரிசீலனை செய்து, அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரை செய்யும்.

**4. சபை கூட்டத்திற்கு வராத உறுப்பினர்களை தணிக்கை செய்யும் குழு:**

- ❖ 60 நாட்களுக்கு மேல் சபைக்கு வராத உறுப்பினர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இக்குழு பரிந்துரை செய்யும்.

**5. அரசாங்க உறுதிமொழிகள் குழு:**

- ❖ அமைச்சர்கள் அரசாங்கத்தின் சார்பாக கொடுத்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்று ஆய்வு செய்கிறது.

**6. நெறிமுறைக் குழு:**

- ❖ அவை உறுப்பினர்களின் நடத்தைகளைக் கண்காணிப்பது, ஒழுங்கீனத்திற்கு தண்டனை வழங்குவது பற்றி பரிந்துரை செய்கிறது.

### சட்டம் இயற்றுதல் சார்ந்த குழுக்கள்:

**1. மசோதாக்கள் மீதான ஆய்வுக்குழு:**

- ❖ சபை அனுப்பியுள்ள மசோதாக்களை பரிசீலனை செய்து, அதன் மீதான தன் கருத்துக்களை அறிக்கை மூலம் சமர்ப்பிக்கிறது.

**2. மனுக்கள் மீதான குழு:**

- ❖ இக்குழு சபையிடம் அளிக்கப்படும் மனுக்களைப் பரிசீலனை செய்து அதனை சபைக்கு அளிக்கிறது.

### நிதி நிர்வாகம் பற்றிய குழுக்கள்:

**1. மதிப்பீட்டுக் குழு:**

- ❖ 1950 ல் ஜான் மத்தாய் அவர்களின் பரிந்துரைப்படி இக்குழு உருவாக்கப் -பட்டது. மக்களவை உறுப்பினர்களில் 30 பேர் விகிதப் பிரதிநிதித்துவ,

ஒற்றை மாற்று வாக்கு அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

- ❖ எல்லா கட்சி உறுப்பினர்களும் இடம் பெறுவர். ஆளுங்கட்சி உறுப்பினரே தலைவராக இருப்பார். பட்ஜெட்டில் பல்வேறு திட்டங்களுக்கு உரிய முறையில் பங்கீடு செய்யப்பட்டுள்ளதா என கவனித்தல். தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளைப் பொறுத்து சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்கிறது.

**2. பொதுக் கணக்குக்குழு:**

- ❖ இக்குழுவில் 15 பேர் மக்களவையில் இருந்தும், 7 பேர் மாநிலங்களவையில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவர். எதிர்க்கட்சி தலைவர் இக்குழுவின் தலைவராக இருப்பார்.
- ❖ அரசாங்க கணக்கில் செலவுத் தொகை யாவும் பாராளுமன்ற நோக்கங்களுக்கு மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளதா என ஆய்வு செய்கிறது.
- ❖ செலவு செய்ய அதிகார வரம்பு இடமளித்துள்ளதா என ஆராய்தல்.
- ❖ இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையை ஆய்வு செய்தல்.

**3. பொதுத் துறை நிறுவனங்கள் மீதான குழு:**

- ❖ கிருஷ்ண மேனன் குழுவின்படி 1964இல் அமைக்கப்பட்டது. 15 பேர் மக்களவையில் இருந்தும், 7 பேர் மாநிலங்களவையில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- ❖ குழுத்தலைவராக மக்களவை உறுப்பினரே நியமிக்கப்படுவார்.
- ❖ பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகளைச் சரிபார்த்தல்
- ❖ பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்பான இந்திய தணிக்கைத் தலைவரின் அறிக்கையினை ஆய்வு செய்தல்.

**கேள்வி நேரம் (Question Hour)**

- ❖ பாராளுமன்ற கூட்டங்களின் முதல் ஒரு மணி நேரம் (பொதுவாக காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரை) உறுப்பினர்கள் கேள்விகளை கேட்கவும் அமைச்சர்கள் அக்கேள்விகளுக்கு பதிலளிக்கவும் ஒதுக்கப்படும்.
- ❖ இதுவேகேள்வி நேரம் எனப்படும். பாராளுமன்றத்தில் அதன் உறுப்பினர்கள் கேள்வி கேட்பதற்கு 10 நாட்கள் முன்னதாக நோட்டீஸ் வழங்கப்பட வேண்டும்.